## ஒரு பார்வை - பகுதி 1

**ஹூது (அலை) மற்றும் ஸாலிஹ் (அலை) தங்கள் மக்களை அல்லாஹ்வை வணங்குமாறு அழைப்பு விடுத்தனர். ஆனால் அம் மக்கள் நிராகரித்ததால், அல்லாஹ் அவர்களை அழித்துவிட்டான். முதுமையான இப்ராஹீம் (அலை) மற்றும் அவரது மனைவிக்கு மகன் பிறக்கப்போகும் செய்தியை மலக்குகள் கொண்டு வந்தார்கள். லூத் (அலை) மக்களுடன் நடந்த சம்பவமும் விவரிக்கப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 10: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 11, ஹூது; வசனம்: 50 - 83; பிரிவு: 5 - 7

1. ‘ஆது’ சமூகத்திற்கு அவர்களுடைய சகோதரர் ‘ஹூதை’ நபியாக அனுப்பி வைத்தோம். (ஸூரா - ஹூது; பிரிவு: 5)

2. அவர்கள் மக்களிடம் அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை என போதித்தார்கள். (ஸூரா - ஹூது; பிரிவு: 5)

3. ஆனால் அம்மக்கள் அவரை நம்பவில்லை. தாங்கள் வணங்கி வந்த தெய்வங்களை விடவுமில்லை. அத்தெய்வங்களில் ஒன்றால் அவருக்குக் கேடு வந்துவிட்டதாகவும் கூறினர். (ஸூரா - ஹூது; பிரிவு: 5)

4. அதற்கு ஹூது (நபி), ‘நிச்சயமாக நான் அல்லாஹ்வை சாட்சியாக்குகிறேன். நீங்கள் எதை அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறீர்களோ அதை விட்டு நான் விலகிக் கொண்டவன்’ என்றார். (ஸூரா - ஹூது; பிரிவு: 5)

5. அதன் பின்பு, இறைவனின் ஆணை வந்தது. ஹூதையும், அவருடன் இருந்த விசுவாசிகளையும் கடினமான வேதனையிலிருந்து அவன் தன் அருளால் காப்பாற்றினான். (ஸூரா - ஹூது; பிரிவு: 5)

6. 'ஸமூது' மக்களுக்கு அவர்களுடைய சகோதரர் 'ஸாலிஹை' தூதராக அல்லாஹ் அனுப்பினான். (ஸூரா - ஹூது; பிரிவு: 6)

7. அல்லாஹ் ஒருவனையே வணங்கவேண்டும், வேறு இறைவன் இல்லை என அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். (ஸூரா - ஹூது; பிரிவு: 6)

8. அதற்கு அம்மக்கள், 'ஸாலிஹே! எங்கள் முன்னோர்கள் வணங்கி வந்த தெய்வங்களை நாங்கள் வணங்கக் கூடாது என கூறுகிறீர். அது பற்றி நாங்கள் ஐயம் கொள்கிறோம்' என கூறினர். (ஸூரா - ஹூது; பிரிவு: 6)

9. அவர்களை சோதிப்பதற்காக ஒரு பெண் ஒட்டகம் அத்தாட்சியாக அவர்களுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அதனை அவர்கள் கொன்று விட்டனர். (ஸூரா - ஹூது; பிரிவு: 6)

10. அல்லாஹ் அவர்களை மூன்று நாட்களுக்கு பூமியில் சுகம் அனுபவிக்க செய்தான். (ஸூரா - ஹூது; பிரிவு: 6)

11. பின்பு, இடி முழக்கத்தைக் கொண்டு அவர்கள் தங்கள் வீடுகளில் இருந்தவாறே இறக்கச் செய்தான். ஸாலிஹையும் அவருடன் இருந்த விசுவாசிகளையும் அவன் காப்பாற்றினான். (ஸூரா - ஹூது; பிரிவு: 6)

12. வானவர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களிடம் வந்து 'ஸலாம்' கூறினர். அவர் சுட்ட கன்றை கொண்டுவந்து அவர்களுக்கு உணவளித்தார். ஆனால் அவர்கள் அதை எடுக்கவில்லை.

அதனால் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு சந்தேகம் வந்தது. (ஸூரா - ஹூது; பிரிவு: 7)

13. இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு பிறக்கப்போகும் 'இஸ்ஹாக்' பற்றியும், அதன்பின் 'யாகூப்' என்னும் பேரன் பிறக்கப் போவது பற்றியும் நற்செய்தி கூறப்பட்டது. வயதான அவருடைய மனைவி அதைக்கேட்டு மிக ஆச்சரியமுற்றார். (ஸூரா - ஹூது; பிரிவு: 7)

14. "அல்லாஹ்வுடைய சக்தியைப் பற்றி ஆச்சரியப்பட வேண்டாம். அல்லாஹ்வின் ரஹ்மத்தும், அவனுடைய பரக்கத்தும், அருளும், பாக்கியமும் இவ்வீட்டிலுள்ள உங்கள் மீது உண்டாவதாக!" என வானவர்கள் கூறினர். (ஸூரா - ஹூது; பிரிவு: 7)

15. பின்னர் வானவர்கள் அழகிய ஆண்கள் வடிவத்தில் லூத் நபியிடம் வந்தனர். ஓரினச்சேர்க்கை ஆசையுடன் திரியும் தனது மக்களிடமிருந்து இவர்களை எவ்வாறு பாதுகாப்பது என லூத் நபி வருந்தினார். (ஸூரா - ஹூது; பிரிவு: 7)

16. அதற்குள் அம்மக்கள், லூத் நபியிடம் வந்து, அந்த ஆண்களை (ஓரினச் சேர்க்கைக்காக) தங்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டனர். அதற்கு லூத் நபி, தம் பெண் மகள்களை, மணம் புரிந்து கொள்ளுமாறு அவர்களை வேண்டினார். (ஸூரா - ஹூது; பிரிவு: 7)

17. ஆனால் அம்மக்கள் அதற்கு செவி சாய்க்கவில்லை. லூத் நபி அம்மக்களிடம், 'உங்களில் ஒரு நல்லவர் கூட இல்லையா?' என ஆதங்கப்பட்டார். (ஸூரா - ஹூது; பிரிவு: 7)

18. அப்போது ஆண் வடிவில் உள்ள வானவர்கள், லூத் நபியிடம் தாங்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட வானவர்கள் என்றும்,

அவரது மனைவியை தவிர, மற்ற குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு இரவோடு இரவாக அந்த நகரத்தை விட்டு வெளியேறுமாறு அவரைக் கேட்டுக் கொண்டனர். (ஸூரா - ஹூது; பிரிவு: 7)

19. பின்னர் அல்லாஹ்வின் கட்டளை பிறந்தது, அந்நகரம் தலைகீழாகக் கவிழ்க்கப்பட்டது. அதன்மீது சுட்ட செங்கற்களை மழையாக பொழியச் செய்து அவர்கள் அழிக்கப்பட்டனர். (ஸூரா - ஹூது; பிரிவு: 7)

## ஒரு பார்வை - பகுதி 2

**ஷுஐப் (அலை) பற்றியும், அவருக்கு எதிராக மக்கள் வாதிட்டது பற்றியும், இறுதியில் அவர்கள் தண்டிக்கப்பட்டது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பூமியில் மனிதர்கள் படைக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் முந்தைய வரலாறுகளை மக்களுக்கு விளக்குவதற்கான காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. யூசுப் (அலை) அவர்களின் வரலாறு தொடங்கி, அவர்கள் ஒரு எகிப்தியருக்கு அடிமையாக விற்கப்படுவது வரை இந்த பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 10: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 11, ஹூது; வசனம்: 84 - 123; பிரிவு: 8 - 10

1. **'மத்யன்' என்ற ஊர் மக்களுக்கு அவர்களுடைய சகோதரர் ஷுஐபை தூதராக அனுப்பினோம். (ஸூரா - ஹூது; பிரிவு: 8)**

2. **அவர் தம் மக்களிடம், அல்லாஹ் ஒருவனையே வணங்குமாறும், அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் போதித்தார். மேலும் தங்கள் அளவையும், நிலுவையையும் குறைக்காமல் வாணிபம் செய்ய அறிவுறுத்தினார். (ஸூரா - ஹூது; பிரிவு: 8)**

3. **ஆனால் அவர்கள் அதை செவி மடுக்காமல், 'எங்கள் முன்னோர்கள் வணங்கிய தெய்வங்களையா விடச் சொல்கிறீர்? நாங்கள் எங்கள் விருப்பப்படி அளவையும், நிலுவையையும் செய்வோம்' என விவாதம் செய்தனர். (ஸூரா - ஹூது; பிரிவு: 8)**

4. **ஷுஐபின் குடும்பத்தார் மட்டும் இல்லாமலிருந்தால், அவரை கல்லெறிந்து கொன்றிருப்போம்' என்றனர். (ஸூரா - ஹூது; பிரிவு: 8)**

5. அல்லாஹ்வின் வேதனை வந்த போது, ஷுஐபையும் அவருடன் இருந்த விசுவாசிகளையும் அல்லாஹ் தன் அருளால் காப்பாற்றினான். அநீதியிழைத்தோர்களை விடியல் நேரத்தில் இடி முழக்கம் தாக்கியது. அவர்கள் காலையில் தங்கள் வீடுகளில் இறந்து கிடந்தனர். (ஸூரா - ஹூது; பிரிவு: 8)

6. அல்லாஹ் தன் சான்றுகளுடனும், தெளிவான அத்தாட்சிகளுடனும் மூஸாவை தூதராக பிர்அவுன் கூட்டத்திற்கு அனுப்பி வைத்தான். (ஸூரா - ஹூது; பிரிவு: 9)

7. பிர்அவுன் மறுமை நாளில் தன் மக்கள் முன்னிலையில் வருவான். அவர்களை நரகத்திற்கு அழைத்துச் செல்வான். (ஸூரா - ஹூது; பிரிவு: 9)

8. மக்கள் நல்வழியில் இருக்கும்போது, இறைவன் எந்த ஊரையும் அநியாயமாக அழிப்பதில்லை. (ஸூரா - ஹூது; பிரிவு: 10)

9. இறைவன் யாருக்கு அருள் புரிந்தானோ அவர்களைத் தவிர மற்றவர்கள் கருத்து முரண்பாடு உள்ளவர்களாக நீடிப்பர். இதற்காகவே அவர்கள் படைக்கப்பட்டனர். மறுமையில் நல்லோர்களுக்கு சொர்க்கமும், தீயோர்களுக்கு நரகமும் உண்டு. (ஸூரா - ஹூது; பிரிவு: 10)

10. முந்தைய நபிமார்களின் வரலாறுகளைக் கூறி, நபி (ஸல்) அவர்களின் இதயத்தை அல்லாஹ் வலுப்படுத்துகிறான். அதில் உண்மையும் படிப்பினையும் நினைவூட்டலும் வந்துள்ளன. (ஸூரா - ஹூது; பிரிவு: 10)

11. அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனையே நம்புங்கள். உங்கள் இறைவன் நீங்கள் செய்பவைகளைப் பற்றி நன்கு அறிவான். (ஸூரா - ஹூது; பிரிவு: 10)

## ஸூரா - 12, யூசுப்; வசனம்: 1 - 20; பிரிவு: 1 - 2

12. அலிஃப், லாம், றா! இவை தெளிவான இவ்வேதத்தின் வசனங்களாகும். (ஸூரா - யூசுப்; பிரிவு: 1)

13. அல்லாஹ் குர்ஆன் மூலம் வரலாறுகளில் மிக்க அழகானதொன்றை கூறுகிறான். இதற்குமுன் நபி (ஸல்) அவர்களுக்கு இது குறித்து ஏதும் தெரியாது. (ஸூரா - யூசுப்; பிரிவு: 1)

14. யூசுப் (அலை), 11 நட்சத்திரங்கள் மற்றும் சூரியன், சந்திரன் ஆகியவை தமக்கு சிரம் பணிவதாக கனவு கண்டார்கள். அதை தம் தந்தை யாகூப் நபியிடம் கூறினார்கள். (ஸூரா - யூசுப்; பிரிவு: 1)

15. அதற்கு யாகூப் (அலை) அவர்கள், "உமது கனவை உம் சகோதரர்களிடம் எடுத்துரைக்க வேண்டாம். அவ்வாறு செய்தால், அவர்கள் உமக்கு எதிராக சதி செய்வார்கள். மேலும், இந்த கனவின்படி அல்லாஹ் நாடியது நடக்கும்" எனக் கூறினார்கள். (ஸூரா - யூசுப்; பிரிவு: 1)

16. யூசுப் (அலை) சகோதரர்கள், அவர் மீது பொறாமை கொண்டு, அவரை கொல்ல சதி செய்தனர். அதில் ஒருவர், 'அவரை கொல்வதற்கு பதில் கிணற்றில் தள்ளி விடலாம்' என யோசனை கூறினார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 2)

17. அந்த சகோதரர்கள், தங்கள் தந்தையிடம் யூசுபை தம்முடன் விளையாட அனுப்புமாறும், தாங்கள் அவரை நன்றாக கவனித்துக் கொள்வதாகவும் வாக்குறுதி அளித்தனர். (ஸூரா - யூசுப்; பிரிவு: 2)

18. யூசுபை அழைத்துச் சென்று, அவரை கிணற்றில் தள்ளி விட்டனர். அவரது சட்டையை எடுத்து, பொய்யான ரத்தத்தை

தேய்த்து, அவரை ஓநாய் கடித்து தின்று விட்டதாக, தன் தந்தையிடம் கூறினர். (ஸூரா - யூசுப்; பிரிவு: 2)

19. இதை கேட்டு யாகூப் (அலை) அவர்கள் அழுது புழம்பினார். தமக்கு பொறுமையை வேண்டி அல்லாஹ்விடம் கேட்டார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 2)

20. ஒரு பிரயாணக் கூட்டம், யூசுபை கிணற்றில் கண்டு, அவரை காப்பாற்றி, எகிப்து நாட்டு மன்னர் மாளிகையில் சில பணத்திற்கு விற்று விட்டனர். (ஸூரா - யூசுப்; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 3

யூசுப் (அலை) ஒரு எகிப்தியருக்கு விற்கப்பட்டது முதல், சிறையில் இருந்து விடுதலையாகும் வரையிலான நிகழ்வுகள் இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தராவிஹ் - 10: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 12, யூசுப்; வசனம்: 21 - 52; பிரிவு: 3 - 7

1. எகிப்தில் யூசுப் (அலை) அவர்களை வாங்கியவர், தன் மனைவியிடம் அவரை கண்ணியமாக வளர்த்து வருமாறும், அவரை தமது வளர்ப்பு மகனாக ஆக்கிக் கொள்ளலாம் எனவும் கூறினார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 3)

2. அவர் தம் வாலிபத்தை அடைந்ததும், அல்லாஹ் அவருக்கு ஞானத்தையும், கல்வியையும் கொடுத்தான். (ஸூரா - யூசுப்; பிரிவு: 3)

3. அவர் இருந்த வீட்டின் பெண், அவரை தவறான நோக்கத்திற்காக அழைத்தார். ஆனால், யூசுப் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் தன்னை பாதுகாக்கும்படி வேண்டினார்கள். (ஸூரா - யூசுப்; பிரிவு: 3)

4. யூசுப் (அலை) அவர்கள், அவளிடமிருந்து தப்பி ஓடியபோது, அவரது மேலங்கியை பின்புறமாகப் பிடித்து இழுத்து அவள் கிழித்து விட்டாள். அப்போது வாசற்படியில் அவளுடைய கணவன் இருந்தான். அதை அவன் கவனித்து விட்டான். (ஸூரா - யூசுப்; பிரிவு: 3)

5. தன் குற்றத்தை மறைக்க அப்பெண், யூசுப் (அலை) மீது பழியை சுமத்தினார். யூசுப் (அலை) அவர்கள் நடந்ததை கூறினார்கள். (ஸூரா - யூசுப்; பிரிவு: 3)

6. யூசுப் (அலை) மேலங்கியின் பின்புறம் கிழிந்திருந்திருப்பதைக் கண்டதும், தவறு செய்தவர் அந்தப் பெண்தான் என்பதை கணவர் தெரிந்துகொண்டார். ஆகவே, அவரைக் கண்டித்து, ‘உன் பாவத்துக்கு மன்னிப்பு தேடிக்கொள்’ என்று அவர் அவளுக்குக் கூறினார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 3)

7. இச்செய்தி அந்நகரத்தில் பரவியது. ‘அமைச்சரின் மனைவி தன் அடிமை வாலிபர் மீது பைத்தியமாகி விட்டார்’ என்று பெண்கள் பேசிக்கொண்டனர். (ஸூரா - யூசுப்; பிரிவு: 4)

8. அவள் தன்நிலை விளக்கமளிப்பதற்காக, மற்ற பெண்களை விருந்துக்கு அழைத்தாள். நறுக்கிச் சாப்பிடுவதற்காக அவர்கள் ஒவ்வொருவரிடமும், ஒரு கத்தியை கொடுத்தாள். (ஸூரா - யூசுப்; பிரிவு: 4)

9. அச்சமயம் யூசுப் (அலை), அவர்களுக்கு முன் வந்தார். அவரின் அழகைக் கண்டு மெய் மறந்து, அப்பெண்கள் தங்கள் கைகளை அறுத்துக் கொண்டனர். (ஸூரா - யூசுப்; பிரிவு: 4)

10. பின்னர் அந்தப் பெண் தன் விருப்பத்துக்கு இணங்குமாறு யூசுப் (அலை) அவர்களை கேட்க, அவர் மறுத்ததால் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 4)

11. சிறையில் இருந்த இருவர், யூசுப் (அலை) இடம் தாங்கள் கண்ட கனவுக்கு விளக்கம் கேட்டனர். யூசுப் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் அந்த ஞானத்தைக் கொடுத்திருந்தான். (ஸூரா - யூசுப்; பிரிவு: 5)

12. ஒருவர் தன் தலையில் இருந்த ரொட்டித் துண்டுகளை பறவைகள் கொத்தி தின்பதாக கனவு கண்டதை கூறினார். அதன் விளக்கமாக அவர் தூக்கிலடப்பட்டு இறந்தபின், அவர் தலையை பறவைகள் கொத்தித் தின்னும் என கூறினார்கள். (ஸூரா - யூசுப்; பிரிவு: 5)

13. மற்றொருவன் தான் திராட்சை சாறு பிழிவதாக கனவு கண்டதை கூறினான். அதற்கு அவர்கள், அம்மனிதன்

விடுதலைக்கு பின் அரசருக்கு திராட்சையை பிழிந்து கொடுப்பான் என்றார்கள். (ஸூரா - யூசுப்; பிரிவு: 5)

14. யூசுப் (அலை) அவர்கள் சிறைவாசிகளிடம், "இறைவன் ஒருவனே! அவனையே வணங்குங்கள்" என அறிவுரை கூறினார்கள். எனினும் மனிதர்களில் பெரும்பாலோர் அல்லாஹ்வின் அருளுக்கு நன்றி செலுத்துவதில்லை. (ஸூரா - யூசுப்; பிரிவு: 5)

15. ஒரு நாள் எகிப்தின் அரசர் ஒரு கனவு கண்டார். அதில் கொழுத்த ஏழு பசுக்களை, மெலிந்த ஏழு பசுக்கள் விழுங்குவதாகவும், பசுமையான ஏழு கதிர்களுடன், காய்ந்து உலர்ந்த வேறு ஏழு கதிர்களையும் கனவில் கண்டார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 6)

16. இதற்கு யாராலும் விளக்கம் கூற முடியவில்லை. சிறையிலிருந்த இருவரில் விடுதலையானவர், யூசுப் (அலை) அவர்களிடம் வந்து அதற்கு விளக்கம் கேட்டார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 6)

17. அதற்கு அவர்கள், "ஏழு ஆண்டுகள் நல்ல விவசாயம் செய்து அறுவடை செய்யும் விளைச்சல்களில், உங்களுக்கு தேவையானது போக மீதமுள்ளதை சேமித்து வையுங்கள். (ஸூரா - யூசுப்; பிரிவு: 6)

18. அதற்குபின் ஏழு வருடங்கள் கடும் பஞ்சம் வரும். அதில் உங்கள் சேமிப்பு உதவியாக இருக்கும். (ஸூரா - யூசுப்; பிரிவு: 6)

19. அதன் பின் நல்ல மழை வரும். அதில் நீங்கள் திராட்சையை வளர்த்து புசிப்பீர்கள்" என்றார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 6)

20. இதனை அறிந்த அரசர், யூசுப் (அலை) அவர்களை அழைத்து வருமாறு கூறினார். அதற்கு யூசுப் (அலை) மறுத்து, அந்த அரசனிடம், தங்கள் கைகளை வெட்டிக் கொண்ட பெண்களின்

உண்மை விபரத்தை விசாரித்து அறியுமாறு சொன்னார்கள். (ஸூரா - யூசுப்; பிரிவு: 7)

21. அதன்படி அவர்கள் விசாரிக்கப்பட்டார்கள். உண்மை வெளி வந்தது. அந்த அமைச்சரின் மனைவி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டார். நிச்சயமாக யூசுப் உண்மையாளர் என்றும் அவள் கூறினார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 7)

22. இதை கேள்வியுற்ற யூசுப் (அலை) அவர்கள், அன்று நடந்த சம்பவத்திற்கு உண்மையான காரணம் தான் இல்லை என்பதை அந்த அரசர் அறிய வேண்டும், அவருக்கு தான் துரோகம் செய்யவில்லை என்பதை அவருக்கு புரிய வைக்கவே இவ்வாறு கேட்டதாக கூறினார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 7)

23. நிச்சயமாக அல்லாஹ் துரோகிகளின் சூழ்ச்சிக்கு வழிகாட்ட மாட்டான். (ஸூரா - யூசுப்; பிரிவு: 7)

## ஒரு பார்வை - பகுதி 4

யூசுப் (அலை) அவர்கள் நாட்டின் கருவூலங்களுக்கு நிர்வாகியாக பொறுப்பேற்றது முதல் தனது அடையாளத்தை தனது சகோதரர்களிடம் வெளிப்படுத்தும் வரையிலான நிகழ்வுகள் இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தராவிஹ் - 10: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 12, யூசுப்; வசனம்: 53 - 93; பிரிவு: 7 - 10

1. அரசர், யூசுப் (அலை) அவர்களை அழைத்து அவருக்குப் பெரும் பதவியை கொடுக்க விரும்பினார். அப்போது யூசுப் (அலை), தன்னை அந்நாட்டின் கருவூலங்களுக்கு நிர்வாகியாக நியமிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அரசர் அதை ஏற்று அவ்வாறே அவர்களை நியமித்தார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 7)

2. இவ்வாறே தாம் விரும்பியபடி பூமியில் நிர்வாகம் செய்யும் வாய்ப்பை அல்லாஹ், யூசுப் (அலை) அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தான். இவ்வாறே அவன் தான் நாடியவருக்கு தனது அருளை வழங்குகிறான். நன்மை செய்வோரின் பிரதிபலனை அவன் வீணாக்குவதில்லை. (ஸூரா - யூசுப்; பிரிவு: 7)

3. சில வருடங்களுக்கு பிறகு பஞ்சம் வந்தது. எகிப்துக்கு வெளியில் எங்கும் உணவுப்பொருட்கள் கிடைக்கவில்லை. யூசுப்புடைய சகோதரர்கள் தானியங்களுக்காக அங்கு வந்தனர். அவர்களை அவர் அடையாளம் கண்டு கொண்டார்; அவர்களோ அவரை அறிந்துகொள்ளவில்லை. (ஸூரா - யூசுப்; பிரிவு: 8)

4. அவர்களுக்கு வேண்டிய தானியங்களை கிரயத்திற்கு கொடுத்து, பின் அடுத்த தடவை வரும்போது, அவர்களது தந்தைவழி சகோதரர், அதாவது புன்யாமீனை அழைத்து வர வேண்டும் என யூசுப் (அலை) கூறினார். இல்லையெனில் அவர்களுக்கு இனிமேல் தானியங்கள் கிடைக்காது எனவும்

எச்சரித்தார். பின்பு யூசுப் (அலை), தன் வேலையாட்களிடம் அந்த சகோதரர்கள் கொடுத்த பண்டமாற்றுப் பொருளை அவர்கள் மூட்டையிலேயே இரகசியமாக வைத்து விட கட்டளையிட்டார். ஏனென்றால், அவர்கள் வீடுபோய்ச் சேர்ந்து அதைக் கண்டறிந்து, அதை தம்மிடம் ஒப்படைக்க திரும்பி வரக்கூடும். (ஸூரா - யூசுப்; பிரிவு: 8)

5. அவர்கள் வீடுபோய்ச் சேர்ந்தனர். மூடைகளைத் திறந்து பார்த்தபோது, தங்கள் கிரயப்பணமும் அதில் இருப்பதை பார்த்தனர். அதை வைத்து மீண்டும் தானியங்கள் வாங்கலாம். ஆகவே, புன்யாமீனை தங்களுடன் அனுப்புமாறு தங்கள் தந்தையிடம் கேட்டனர். (ஸூரா - யூசுப்; பிரிவு: 8)

6. அவரும் தயக்கத்துடன் புன்யாமீனை அனுப்ப இசைந்து, யூசுப்(அலை) அவர்களுக்கு நேர்ந்ததை ஞாபகப்படுத்தி, பாதுகாப்பாக செல்லுமாறும், புன்யாமீனை பத்திரமாக திரும்ப அழைத்து வருமாறும் கேட்டுக் கொண்டார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 8)

7. சத்தியம் வாங்கிக் கொண்டு, புன்யாமீனை அவர்களுடன் அவர் அனுப்பி வைத்தார். ‘நான் அல்லாஹ்வையே நம்பியிருக்கிறேன். நம்பிக்கை உடையோர் அவனையே நம்பி இருக்கட்டும்’ என்று அவர் கூறினார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 8)

8. இவ்வாறு அச்சகோதரர்கள் அரசவைக்கு வந்தபோது யூசுப் (அலை) அவர்கள், புன்யாமீனை தனியாக அழைத்து, தான் அவருடைய சகோதரன் என்ற உண்மையை கூறி, எவ்வித கவலையும் வேண்டாம் என கூறினார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 9)

9. பின்னர் அவர்களுக்குரிய தானியங்களை கொடுத்து விட்டு, புன்யாமீன் சுமையில் ஒரு பொற்குவளையை ஒளித்து வைத்து விட்டார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 9)

10. அரண்மனை காவலாளி அங்கு ஒரு பொற்குவளை திருடு போய்விட்டதாக அறிவிக்கிறார். யூசுப் (அலை) தன்

சகோதரர்கள் சுமையை பரிசோதிக்க சொல்கிறார்கள். (ஸூரா - யூசுப்; பிரிவு: 9)

11. பின்னர் காவலாளிகள் அவர்களின் சுமையை சரிபார்த்தபோது, புன்யாமீன் பையில் அக்குவளையை கண்டெடுத்தனர். (ஸூரா - யூசுப்; பிரிவு: 9)

12. அதனால் யூசுப் (அலை), புன்யாமீனை பிடித்து வைத்துக்கொண்டார். அவரை விட்டுவிடும்படி சகோதரர்கள் கெஞ்சினர். 'இவருடைய தந்தை, வயது முதிர்ந்தவர். இவரை இழந்து அவர் வாழமுடியாது. ஆகவே இவருக்குப் பதிலாக எங்களில் ஒருவரை பிடித்துக்கொள்ளுங்கள்' என்று கெஞ்சினர். (ஸூரா - யூசுப்; பிரிவு: 9)

13. ஆனால் யூசுப் (அலை) மறுத்து விட்டார். 'யாரிடமிருந்து பொற்குவளை பிடிபட்டதோ அவரை விட்டுவிட்டு வேறொருவரைப் பிடித்துவைப்பது அநீதியாகும்' என்று கூறினார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 9)

14. சகோதரர்கள் தமக்குள் தனித்து ஆலோசனை செய்தார்கள். அதில் மூத்த சகோதரர் தான் தந்தையிடம் வாக்குறுதி கொடுத்துள்ளதால், மற்ற சகோதர்களை தந்தையிடம் அனுப்பி விவரத்தை கூறச் சொல்கிறார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 10)

15. ஊர் திரும்பிய மற்ற சகோதரர்கள் தங்கள் தந்தை யாகூப் (அலை) அவர்களிடம் இதை தெரிவித்தனர். (ஸூரா - யூசுப்; பிரிவு: 10)

16. அவர் மிகவும் மனம் உடைந்து, பின்னர் அதை சகித்துக் கொள்வதே நன்று என கூறி, அல்லாஹ் தன் மக்கள் யாவரையும் தம்மிடம் சேர்த்து விடுவான் என்றார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 10)

17. பின்னர் யூசுப் (அலை) பற்றி நினைத்து அழுதார். துக்கத்தால் அழுது அழுது அவருடைய இரண்டு கண்களும் வெளுத்துப் பஞ்சடைந்து விட்டன. (ஸூரா - யூசுப்; பிரிவு: 10)

18. அதற்கு அம்மக்கள், 'நீர் யூசுபை நினைத்து நினைத்து உம்மை மாய்த்துக்கொள்ள வேண்டாம்' என்று கடிந்து கொண்டனர். (ஸூரா - யூசுப்; பிரிவு: 10)

19. பின்னர் யாகூப் (நபி) அவர்கள், 'என் கவலையையும் துக்கத்தையும் அல்லாஹ்விடமே நான் முறையிடுகிறேன். நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்விடமிருந்து நான் அறிவேன்' என்றார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 10)

20. "என் மக்களே! (மீண்டும் மிஸ்ருக்கு) நீங்கள் செல்லுங்கள்! யூசுபையும் அவருடைய சகோதரரையும் தேடி விசாரியுங்கள். அல்லாஹ்வின் அருளைப் பற்றி நம்பிக்கை இழக்காதீர்கள்" என்று கூறினார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 10)

21. சகோதரர்கள் நபி யூசுப்பிடம் மறுபடியும் வந்து தங்கள் தந்தை படும் துயரத்தை கூறினர். மேலும் அவர்கள், "நாங்கள் சொற்பமான பொருளையே கொண்டு வந்திருக்கின்றோம். எங்களுக்கு நிரப்பமாகத் தானியம் அளந்து கொடுப்பீராக! எங்களுக்கு மேற்கொண்டு தானமாகவும் கொடுப்பீராக!" என்றனர். (ஸூரா - யூசுப்; பிரிவு: 10)

22. அதற்கு யூசுப் (அலை) அவர்கள், "நீங்கள் அறிவீனர்களாக இருந்த போது, யூசுபுக்கும், அவர் சகோதரருக்கும் நீங்கள் என்ன செய்தீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று வினவினார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 10)

23. அதைக் கேட்ட சகோதரர்கள், 'நீர்தான் யூசுபா?' என்றனர். 'ஆம், நான்தான் யூசுப், இவர்தான் என் சகோதரர். நிச்சயமாக அல்லாஹ் எங்கள் மீது அருள் புரிந்திருக்கின்றான். எவர் பயபக்தியுடன், பொறுமை மேற்கொண்டிருக்கிறார்களோ, அத்தகைய நன்மையாளர்களின் கூலியை நிச்சயமாக அல்லாஹ் வீணாக்குவதில்லை" என்று அவர் கூறினார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 10)

24. பின்னர் அவர், 'இன்றைய தினம் உங்கள் மீது எந்தக் கண்டனமும் இல்லை. அல்லாஹ், உங்கள் மன்னிப்பானாக!

அவன் கருணையாளர்களில் பெரும் கருணையாளன்' என்றார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 10)

25. 'என்னுடைய இந்த மேலங்கியைக் கொண்டு சென்று என் தந்தையின் முகத்தில் போடுங்கள்; அவருக்குப் பார்வை வந்துவிடும். உங்கள் குடும்பத்தார் அனைவரையும் என்னிடம் அழைத்து வாருங்கள்' என்று யூசுப் (அலை) கூறினார்கள். (ஸூரா - யூசுப்; பிரிவு: 10)

## ஒரு பார்வை - பகுதி 5

**யூசுப் (அலை) அவர்கள் குடும்பத்துடன் மீண்டும் இணைவதும், அவரது முந்தைய கனவு நிறைவேறுவதும் இந்த பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸூரா அர்ரஃதுவில் வானங்கள், பூமி மற்றும் அதிலுள்ள அனைத்து உயிரினங்களின் படைப்பு பற்றி ஆரம்பமாகிறது. இவை அனைத்தும் அல்லாஹ்வின் கட்டளையின் கீழ் உள்ளன என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.**

## தராவிஹ் - 10: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 12, யூசுப்; வசனம்: 94 - 111; பிரிவு: 11 - 12

1. **சகோதரர்கள் எகிப்திலிருந்து கிளம்பிய நேரத்தில் அவரது தந்தை, தான் யூசுப் (அலை) அவர்களின் வாடையை நுகர்வதாக கூறினார். (அவர் ஜோர்டானுக்கு அருகில் உள்ள கெனான் பகுதியில் இருந்தாலும்). தன்னை யாரும் பைத்தியம் என்று எண்ணி விடவேண்டாம் எனவும் கூறினார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 11)**

2. **சகோதரர்கள் தங்கள் தந்தையை அடைந்ததும், அந்த சட்டையை அவரது முகத்தில் போட்டனர். உடனே அவருக்கு கண்பார்வை திரும்ப வந்தது. (ஸூரா - யூசுப்; பிரிவு: 11)**

3. **பின்னர், அந்த சகோதரர்கள் தங்களை மன்னிக்கும்படி வேண்டினர். அதற்கு அத்தந்தை, "நான் அல்லாஹ்விடம் உங்களுக்காக மன்னிப்பு கோருவேன். நிச்சயமாக அவன் மிக மன்னிப்பவனாகவும், கிருபையுடையோனாகவும் இருக்கிறான்" என்றார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 11)**

4. **பின்னர் அக்குடும்பம் எகிப்தை அடைந்ததும், யூசுப் (அலை), அவர்களை எல்லையில் காத்திருந்து வரவேற்றார். தம் பெற்றோர்களை சிம்மாசனத்தின் மீது அமர்த்தி மரியாதை செய்தார். அவர்கள் அனைவரும் யூசுப் (அலை) அவர்களுக்கு சிரம் பணிந்து மரியாதை செலுத்தினார்கள். இது அவர் முன்பு**

**கண்ட கனவின் விளக்கமாக அமைந்தது. (ஸூரா - யூசுப்; பிரிவு: 11)**

5. **யூசுப் (அலை) அவர்கள், அல்லாஹ்வின் அருளை விளக்கினார். "சிறையில் இருந்த என்னை வெளியேற்றியதுடன், எனக்கும் என் சகோதரர்களுக்கும் இடையே ஷைத்தான் பிரிவினையை உண்டாக்கிய பொழுதும், எங்கள் அனைவரையும் ஒன்று சேர்த்ததன் மூலம், அல்லாஹ் என் மீது பேருபகாரம் செய்திருக்கிறான்" என்றார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 11)**

6. **யூசுப் (அலை) கேட்ட துஆ: "இறைவனே! வானங்களையும், பூமியையும் முன்மாதிரி இன்றி படைத்தவனே! நீயே இம்மையிலும் மறுமையிலும் எனது காவலனாக இருக்கிறாய். என்னை முஃமீனாக இறக்க வைத்து, நல்லவர்கள் கூட்டத்தில் சேர்ப்பாயாக!" என்றார். (ஸூரா - யூசுப்; பிரிவு: 11)**

7. **யூசுப் (அலை) அவர்கள் வரலாறு, நமக்கு நல்லதோர் படிப்பினையாக உள்ளது. இது பொய்யான கட்டுக்கதை அல்ல. இது விசுவாசிகளுக்கு நேரான வழியாகவும், ஓர் அருளாகவும் உள்ளது. (ஸூரா - யூசுப்; பிரிவு: 12)**

## ஸூரா - 13, அர்ரஃது; வசனம்: 1 - 20; பிரிவு: 1 - 2

1. **வானங்களைத் தூண்கள் ஏதுமின்றி உயர்த்தியவன் அல்லாஹ்வே! பின்னர் அவன் அர்ஷின் மீது நிலைகொண்டான். அவனே சூரியனையும், சந்திரனையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றான். அவை அனைத்தும் குறிப்பிட்ட தவணை வரை ஓடிக்கொண்டிருக்கும். (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 1)**

2. **மரங்களையும், கனி வகைகளையும் கவனியுங்கள். அவைகளுக்கு ஒரே வகையான தண்ணீர்தான் பாய்ச்சப்படுகிறது. ஆனால் அவை ஒவ்வொன்றும் சுவையில் வித்தியாசமானவை. (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 1)**

3. மனிதனுக்கு முன்னும், பின்னும் தொடர்ந்து வரக்கூடிய வானவர்கள் உள்ளனர். அவர்கள் அல்லாஹ்வின் ஆணையின்படி மனிதனைப் பாதுகாக்கின்றனர். (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 2)

4. எந்த சமூகத்தாரும் தாங்கள் செய்யும் நற்செயல்களை மாற்றிக் கொள்ளாத வரையில், நிச்சயமாக அல்லாஹ்வும் அவர்களுக்கு புரிந்த அருளை மாற்றுவதில்லை. (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 2)

5. ஒரு சமூகத்தாருக்கு அல்லாஹ் வேதனை கொடுக்க நாடினால், அதனைத் தடுப்போர் யாருமில்லை. அவனைத் தவிர அவர்களுக்கு வேறு காவலர் யாரும் இல்லை. (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 2)

6. வானங்களிலும், பூமியிலும் இருப்பவை யாவும் விரும்பியோ அல்லது விரும்பாமலோ, அல்லாஹ்வுக்குச் சிரம் பணிந்து வணங்குகின்றன. காலையிலும், மாலையிலும் அவற்றின் நிழல்களும்கூட (சஜிதா) - சிரம் பணிந்து வணங்குகின்றன. (சஜிதா - 2) (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 2)

7. ‘அல்லாஹ்தான் அனைத்து பொருட்களின் படைப்பாளன். அவனே யாவற்றையும் அடக்கி ஆள்கின்ற ஏக இறைவன்’ என்று கூறுவீராக. (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 2)

---